IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.73/2024

dated : 23.06.2025

D.W.3

Name மாரிக்கனி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அரியநாயகிபுரம் கீழத்தெரு மகமை தலைவர் வேறு ஒருவர் நாட்டாமை வேறு ஒருவர். தற்போது நாட்டாமை காளியப்பன் முன்பு பழனிச்சாமி இருந்தார். கீழத்தெரு மகமையைச் சேர்ந்த வரிதாரர்கள் அனைவருக்கும் மேற்படி பழனிச்சாமி 5ம் பிரதிவாதியின் பிரதிநிதியாக இருந்தார். அவர் முன்னதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் எங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைதான். இந்து நாடார் உறவினர் கமிட்டியின் அடிப்படை உறுப்பினர் அந்த கமிட்டிதான் சங்கம் ஆகும். அந்த கமிட்டிதான் பள்ளி நிர்வாகம் செய்து வருகிறது. அது பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். நானும், 3ம் பிரதிவாதியும், ஒரு தரப்பாக செயல்படுகிறோம் என்றால் சரிதான். எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். அய்யன் கணேச மூர்த்தியின் அறிவுரைப்படி சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல நானாகதான்

வந்துள்ளேன். வழக்கு நடவடிக்கைகள் எனக்கு நேரடியாக தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் காணப்படும் விவரங்களை அய்யன் கணேச மூர்த்திதான் கூறினார் என்றால் சரியல்ல நான்தான் கூறினேன். 3ம் பிரதிவாதிதான் வழக்கின் தற்போதைய நடவடிக்கைகளை பற்றி என்னிடம் சொன்னார். நான் இவ்வழக்கை பொறுத்தவரை 3ம் தரப்பினர் அல்ல என்றும் 5ம் பிரதிவாதி அமைப்பின் உறுப்பினர் என்பதால் நான் 3ம் தரப்பினர் என்று கூற இயலாது என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் ஏற்பாட்டின் பேரில் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது எதிர்வாதத்திற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிர்வாகம் கலகம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் தன்னிச்சையாக செயல்படும் நோக்கத்தோடு வழக்கிற்காக 3ம் பிரதிவாதியின் ஏற்பாட்டில் கூறும் பொய் என்றால் சரியல்ல. நானும், மற்ற பிரதிவாதிகளும் தனிக்குழுவாக செயல்பட்டு வருவதால்தான் ஊரில் உள்ள பல பிரச்சனைகளும் ஏற்படுகிறது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலங்கள் உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.23 19:12:55 +0530